1987 ஏப்ரல் 8]

இரவு நேர நெடுந்தூர பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்கள்.

340—(*வினா எண் 4814) திரு. க. சோலைராசு, திரு. மா. சின்னராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவுநேர நெடுந்தூரப் பேருந்தில் இரண்டு ஓட்டுநர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கழகங்களில் இரவு நேர பேருந்துகளுக்கு இரு ஓட்டுநர்கள் நியமிக்கப்பட வேண்டிய நிலைகளில், இரு ஓட்டுநர்கள் நியமிக்கப்பட்டு ஓட்டுகிற வழக்கம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று இரவு நேரத்தில் செல்கிற லாரிகளிலும், அல்லது தனியார் பஸ்களிலும் இரண்டு ஓட்டுநர்கள் இருந்துதான் ஓட்ட வேண்டும் என்று அரசு அறிவுறுத்துமா? இரவு நேரத்தில் அரசுப் பேருந்துகளை ஓட்டக்கூடிய ஓட்டுநர்களுக்கு சிறப்புப் படி ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரத்திலே ஓட்டுவதாக இருந்தாலும் சரி, அல்லது பகல் நேரத்திலே வண்டி ஓட்டுவதாக இருந்தாலும் சரி, 8 மணி நேரத்திற்கு மேல் தொடர்ச்சியாக ஒரு ஓட்டுநர் ஓட்டக்கூடாது, உடனே மாற்றப்பட வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அதற்கேற்பத்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். தனியார் துறையாக இருந்தாலும்கூட இப்படி செயல்படுவதுதான் அந்த ஓட்டுநர்களுக்கும், அந்த வண்டிக்கும், இன்னும் பொது மக்களுக்கும் எல்லோருக்கும் நல்லது என்பதை நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதைக் கடுமையாக்க வேண்டும் என்ற உணர்விலேதான் இப்போது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்து, இரவு நேரத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு ஏதாவது சிறப்பு ஊதியம் தரப்படுகிறதா என்று கேட்டார்கள். அதை ஒரு வகையிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குறிப்பாக எவ்வளவு, எப்படி என்பதை நான் சொல்ல முடியாது. அதற்கான குறிப்பு இப்போதில்லை.